1970 ஏப்ரல் 2]

Vacant space in jails

*647 *Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) Whether vacant space available in jails are used to grow vegetables;

(*b*) if so, the area so used in the various Central and Sub Jails;

(*c*) the types of vegetables grown. and

(*d*) the nature of their disposal?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) 323.18 ஏக்கர்கள்.

(உ) கீரை, வெண்டை, கேரட் (carort), முள்ளங்கி, மொச்சை, பப்பாளி, கத்தரி, சீமைத்தக்காளி, "பீட்ரூட்" கிழங்கு, வாழை, பூசணி, "நூல்கோல்", முருங்கை, நாட்டு அவரை, அகத்தி, கொடிப்பசலை, கொத்தவரை முதலிய காய்கறிகள் பயிரிடப் படுகின்றன.

(எ) பயிரிடப்படும் காய்கறிகள் கைதிகளின் உணவுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. உபரியாகவுள்ள காய்கறிகள் சிறை இலாகா அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும், மற்ற அரசாங்க இலாகா அதிகாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் விற்கப்படு கின்றன. சில சமயங்களில் சிறை இலாகா ஊழியர்களுக்கு சிறை கண்காணிப்பாளரின் அனுமதியின் பேரில் விலை பெருமலும் விநியோகிக்கப்படுகின்றன.

திரு. பெ. சீனிவாசன்: சார், மதுரைச் சிறைச்சாலையில் அமைச்சர் அவர்களும் நானும் ஒரு காலத்திலே இருந்தோம். அந்தச் சிறைச்சாலையிலே உள்ள தோட்டத்திற்கு விடப்பட்ட தண்ணீர் அங்கிருக்கின்ற கக்கூஸ்களிலிருந்து வருகின்ற கழிவு நீரை விட்டு அதிலே பயிர்செய்த காய்கறிகளைத் தான் அப்பொழுது உணவாகப் போட்டார்கள். அந்த நிலை மாறி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நிலத்திற்கு உரம் போடுவதைப் பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிந்திருப் பார்கள் என்று நம்புகிறேன்.

THIRU B. VENKATASWAMY: May I know whether there is any proposal to have fruit planations like Vineyards, Sapota, etc., in the jails?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: காய்கறிகளைப்பற்றித்தான் என்னிடத்திலே விவரம் இருக்கிறது.